சார்பு நீதிமன்றம், இலால்குடி.

OS.No.30/2018

2021-ம் ஆண்டு செவ்வாய் கிழமை மார்ச் 23-ம் நாள் DW4 சாட்சியான வாக்குமூலம். 54 வது விதிகள் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி செல்வி. ஜி.மகாலட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி தெரிவிக்கப்படுகிறது.

பெயர் - குணசேகரன்

த/பெ -

வயது -

ஊர் -

வட்டம் -

மாவட்டம் -

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். 18.08.2008 தேதியில் எனது மகன் ராம்குமார் எனக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகாரப் பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.20. 09.03.2011 தேதியில் என் மகன் ராம்குமாருக்கு சேட்டு என்பவர் எழுதிக்கொடுத்த கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.21. மேற்படி அதே தேதியில் ராம்குமாருக்கு மேற்படி சேட்டு எழுதிக்கொடுத்த மற்றொரு சொத்துக்கான கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.22. 30.05.2011 தேதியில் மேற்படி சேட்டு எனது மகன் ராம்குமாருக்கு எழுதிக்கொடுத்த மற்றொரு சொத்துக்கான கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.23.( மேற்கண்ட ஆவணங்களின் அசல் கடன் வகைக்காக ஸ்ரீரங்கம் நிலவள வங்கியில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் அதன் நகல் தாக்கல் செய்யப்படுகிறது) , ராம்குமார் பெயரில் உள்ள நிலங்களுக்கான அ-பதிவேட்டு நல் பி.வா.சா.ஆ.24. நான் கிரயம் வாங்கிய சொத்திற்குரிய சிட்டா பி.வா.சா.ஆ.25. அந்த நிலங்களுக்குரிய கணினி பட்டா பி.வா.சா.ஆ.26. சர்வே எண்.225 க்குரிய புல வரைபடம் பி.வா.சா.ஆ.27. சர்வே எண். 255 க்குரிய புல வரைபடம் பி.வா.சா.ஆ.28. 1423 மற்றும் 1430 பசலி வருடங்களுக்கான கிஸ்தி ரசீது பி.வா.சா.ஆ.29. நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை ஏற்றுக்கொண்டு வழக்கில் தீர்வு காண வேண்டுகிறேன்.